பக்கங்கள்: எட்டு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 ஐப்பசி 08 வியாழக்கிழமை (25.10.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 329

# அரசின் சொந்தத் தீர்வு: மாகாண சபை நிர்வாக முறையும் + ஒன்றும்

## ஜனாதிபதி தெரிவித்ததாக பிரதம நீதியரசர் தகவல்

யாழ்ப்பாணம்,ஒக்ரோபர்25

நாட்டின் இனப்பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக அரசு சொந்தத் தீர்வு ஒன்றை முன்வைக்கும் என்றும் -

அது அரசமைப்புச் சட்டத்துக்கான 13 ஆவது திருத்தத்துடன் (அதாவது மாகாண சபைகள் நிர்வாக முறையுடன்) மேலும் ஒன்று சேர்க்கப்பட்டதாக அமையும் எனவும் -

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறியிருக்கின்றார்.

கடந்த வாரம் நடைபெற்ற சந்திப்பு ஒன்றின்போது ஜனாதிபதி இதனைத் தெரிவித்ததாக யாழ்ப்பாண நீதிமன்ற வளாகத்தின் நவீன கட்டடத் தொகுதியை நேற்றுத் திறந்து வைத்துப் பேசுகையில் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா கூறினார்.



நீதிமன்ற வளாகக் கட்டடத்தைப் பிரதம நீதியரசர் திறந்துவைக்கிறார். யாழ்.மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜா அருகில் காணப்படுகிறார்.

யாழ்ப்பாண நீதிமன்ற வளாகத்தின் நவீன கட்டடத் தொகுதி பிரதம நீதியரசரால் நேற்றுத் திறந்துவைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து நடைபெற்ற வைபவத்தில் பிரதம நீதியரசர் உரையாற்றுகையில் தெரிவித்தாவது-

இந்த நவீன அடுக்குமாடி நீதிமன்றக் கட்டடத் தொகுதியின் சம்பிரதாயபூர்வ திறப்பு விழாவானது உண்மையிலேயே யாழ்ப்பாண மக்களுக்கு மட்டுமன்றி பொதுவாக எந்த வித இன சமூக கலாசார வேறுபாடின்றி முழு இலங்கை மக்களுக்கும் மற்றும் நீதியையும் சமாதானத்தையும் விரும்பும் உலக மக்கள் அனைவருக்கும்

(08ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் உடல்களை புதைத்தது இராணுவம்

கொழும்பு,ஒக்.26

அநுராதபுரம் விமானப் படைத் தளம் மீது தாக்குதல் நடத்தி வீரச்சாவடைந்த கரும்புலிகள் 20 பேரின் உடல்களை புதைத்துவிட்டதாக இராணுவம் அறிவித்துள்ளது.

பிரேதப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் நீதிமன்றின் உத்தரவின் பேரிலேயே தாங்கள் சடலங்களைப் புதைத்துவிட்டனர் என இராணுவத்தினர் தெரிவித்தனர். கரும்புலிகளின் உடல்கள் சிதைந்த நிலையில் இருந்தமையால்தான் அவற்றைத் தாங்கள் புதைக்க நேரிட்டத்ததாகவும் இராணுவத்தினர் அறிவித்திருக்கின்றனர். (சி)

# விமானப்படைத் தளங்களின் பாதுகாப்பு இராணுவத்திடம்!

கொழும்பு,ஒக். 25

• அநுராதபுரம் வான்படைத் தளத்தின் மீது கடந்த திங்கட்கிழமை தமிழீழ விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலைத் தொடர்ந்து, பல விமானப் படைத் தளங்களின் பாதுகாப்பு இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதற்கான உத்தரவுகள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவினால் வழங்கப்பட்டுள்ளது.

அநுராதபுரம் விமானப் படைத்தளத்தின் பாதுகாப்பு கஜபா றெஜிமென்டிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் அநுராதபுரம் பிராந்திய கட்டளைத் தளபதியாக மேஜர் ஜெனரல் சனத் கருணாரட்ண மஹிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டுள்ளார். இந்தப் பதவி நிலை புதியது என்பது குறிப்பிடத்தக்கது.

(08ஆம் பக்கம் பார்க்க)

# மாங்குளத்தில் விமானத் தாக்குதல்

கிளிநொச்சி,ஒக். 25

விமானப்படையினரின் மிக் விமானங்கள் மாங்குளம் பனிச்சங்கேணிப் பகுதியில் இரு தடவைகள் குண்டு வீச்சுக்களை நடத்தியுள்ளன.

நேற்றுப் புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு முதலாவது தாக்குதலும் 3.40 மணிக்கு இரண்டாவது தாக்குதலும் நடத்தியுள்ளன.

மக்கள் குடியிருப்புகள் மீது நடத்திய வான் தாகுதலில் ஏற்பட்ட சேதவிவரங்கள் தெரியவரவில்லை. (சி)

# கொலைகளை முடிவுக்குக் கொண்டுவர உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும்

## பிரதம நீதியரசரிடம் யாழ். ஆயர் வலியுறுத்து

யாழ்ப்பாணம்,ஒக்.25

குடாநாட்டில் அதிகரித்துவரும் கொலை மற்றும் வன்முறைச் சம்பவங்களை முடிவுக்குக் கொண்டுவர பிரதம நீதியரசர் என்ற வகையில் தலையிட்டு உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

இவ்வாறு பிரதம நீதியரசர் சரத் என். சில்வாவிடம் நேரடியாக வேண்டுகோள் விடுத்தார் யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை.

யாழ். நீதிமன்ற வளாகக் கட்டடத் தொகுதியைத் திறந்து வைப்பதற்காக பிரதம நீதியரசர் நேற்று யாழ். வந்திருந்தார். அந்தத் திறப்பு விழா வைபவத்தில் யாழ். ஆயரும் கலந்து கொண்டார்.

திறப்பு விழா வைபவம் முடிவடைந்த பின். யாழ. ஆயரும் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகளும் பிரதம நீதியரசருடன் கலந்துரையாடினர்.

இதன்போதே யாழ்.ஆயர் மேற்கண்ட வேண்டுகோளை விடுத்தார்.

(08ஆம் பக்கம் பார்க்க)

# கரும்புலி வீரர்களின் உடல்களை நிர்வாணப்படுத்தியமை குரூரம்!

## ஐ.நாவிடம் விடுதலைப் புலிகள் முறைப்பாடு

கொழும்பு, ஒக். 25

அநுராதபுரம் வான்படைத்தளத்தை தாக்கியழித்த கரும்புலிகளின் உடல்களை நிர்வாணப்படுத்திய ஸ்ரீலங்காவின் குரூரமான செயலானது போரில் உயிரிழந்தோர் தொடர்பிலான ஜெனிவா மாநாட்டு முடிவுகளுக்கு எதிரானது என்று ஐக்கிய நாடுகள் சபையிடம் தமிழீழ விடுதலைப் புலிகள் முறைப்பாடு செய்துள்ளனர்.

ஐ.நாவின் மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான விவகாரங்களுக்கான பேச்சாளருக்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான விவகாரங்களுக்கான பேச்சாளர் நவரூபன் செல்வி மின்னஞ்சல் மூலமாக அனுப்பி வைத்துள்ள முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

• அநுராதபுரம் வான்படைத்தளத்தின் மீது ஒக்ரோபர் 22 ஆம் திகதி கரும்புலிகள் தாக்குதல் நடத்திய பின்னர் மோதல் நடைபெற்ற பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் 20 சடலங்களை அடையாளம் கண்டுள்ளதாக ஸ்ரீலங்கா இராணுவம் அறிவித்தது.

உரிய மரபுகளைப் பின்பற்றிவரும் தமிழீழ விடுதலைப் புலிகள் எமது போராளிகளின் உடல்களை அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலமாக ஒப்படைக்குமாறு வேண்டுகோள் விடுத்தோம். நாங்கள் போராளிகளின் உடல்களுக்காகக் காத்திருந்தபோது ஸ்ரீலங்கா இராணுவத்தின் செயற்பாடு எம்மை அதிர்ச்சியடைய வைத்துள்ளது.

தாக்குதலில் உயிரிழந்த தமிழீழ விடுதலைப் புலிப் போராளிகளின் உடல்களை நிர்வாணப்படுத்தி அதனைப் பொதுமக்களின்

(08ஆம் பக்கம் பார்க்க)

# 4 ஹெலிகள், 5 விமானங்கள் இழப்பை ஒப்புக்கொள்கிறோம்

## நாடாளுமன்றில் பிரதமர் ரட்ணசிறி

கொழும்பு,ஒக்.25

அநுராதபுரம் விமானப் படைத்தளம் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் மொத்தமாக 4 ஹெலிக்கொப்டர்களும் 5 விமானங்களும் அழிக்கப்பட்டிருக்கின்றன என்பதை அரசின் சார்பாக நேற்று நாடாளுமன்றத்தில் ஒப்புக்கொண்டார் பிரதமர்.

"இத் தாக்குதலின்போது எம்.ஐ. 24 ரக ஹெலிக்கொப்டர் ஒன்று பாரிய சேதத்திற்கு உள்ளானது. மற்றுமொரு எம்.ஐ. 24

(08ஆம் பக்கம் பார்க்க)

CLOSING DOWN SALES

இன்று முதல் அதிரடி விலைக்கழிவுகளுடன்!

அனைத்து ஆடை வகைகளும்

உடன் விரையுங்கள்

மகாநதி புடவையகம்

இல.04, நவீன சந்தை,சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# OLD BOYS' ASSOCIATION ST. PATRICK 'S COLLEGE, JAFFNA

WILL FELICITATE

## M. MATHUSHAN



OF ST. PATRICK 'S COLLEGE
FOR HIS ACHIEVEMENT BEING FIRST IN THE DISTRICT
AT THE FIFTH STD. SCHOLARSHIP EXAMINATION -2007
FELICITATION CEREMONY WILL BE HELD
AT THE COLLEGE MATHEWS HALL
ON 26.10.2007 AT 10.00 am.
ALONG WITH THE COLLEGE
**PRIZE GIVING**
MEMBERS OF THE ALUMNI ASSOCIATION
ARE INVITED TO GRACE THE OCCASION

GENERAL SECRETARY,
O.B.A. - S.P.C.
JAFFNA.

NO. 59, ST. PATRICK 'S ROAD,
JAFFNA.

(67279)

# முதலாவது பிறந்த தின வாழ்த்து 25.10.2007




ஊரெழு கிழக்கைச் சேர்ந்த
தனேஸ்வரன் - டிலானி தம்பதியரின்
செல்வப் புதல்வி

## தினீசியா



தனது முதலாவது பிறந்த தினத்தை (25.10.2007) டென்மார்க்கில் உள்ள தனது இல்லத்தில் 27.10.2007 அன்று வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார். தினீசியா குட்டியை அன்பு அப்பா, அம்மா, தாத்தா, அம்மம்மா, சித்தி(நவீனா), சித்தப்பா (கருணசீலன்), பெரியமாமா (றஜீபன்), சின்னம்மா (கஜன்), ஆசைமாமா (றிஜின்), அப்பப்பா (ஹொலண்ட்) மற்றும் சித்தி(கலா), சித்தப்பா (அனுராதபுரம்), மாமாமார், அத்தைமார், பூட்டன் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஊரெழு கிழக்கு நாவலம் பதி ஞானவைரவர் அருள் பெற்று சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.



தகவல்:
வ.தவராஜா V.T.R.
(தாத்தா)

ஊரெழு கிழக்கு,
சுன்னாகம் (67260)

# தேசிய கலை இலக்கியப் பெருவிழா 25-10-2007

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்கு
பெருமை தேடித் தந்தவர்களை வாழ்த்துகின்றோம்

கலாசார அலுவல்கள் அமைச்சினால் வருடாந்தம் அகில இலங்கை ரீதியில் நடத்தப்படுகின்ற அரச ஊழியர்களுக்கிடையிலான ஆக்கத்திறன் போட்டியில் பங்குபற்றி தேசிய மட்டத்தில் வெற்றிபெற்ற கலைஞர்களை இந்நாளில் வாழ்த்துகின்றோம்.

முதலாம் இடம்
குறுநாடக எழுத்துருவாக்கம்



திருமதி
கஜநந்தினி வரதலோஜன்
ஆசிரியை, யா/சிறிய புஸ்ப மகளிர் மகா வித்தியாலயம், கரம்பொன்.

3ஆம் இடம்
கவிதை ஆக்கம்



செல்வி
குமாரசாமி பிரபாகரி
நிகழ்ச்சித்திட்ட உதவியாளர், பிரதேசசபை, ஊர்காவற்றுறை.

பாராட்டுச் சான்றிதழ்
பாடலாக்கம்



கீதபொன்கலன் கியோமர்
ஆசிரியர், யா/புனித அந்தோனியார் கல்லூரி, ஊர்காவற்றுறை.

கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் வருடாந்தம் அகில இலங்கை ரீதியில் நடத்தப்படுகின்ற தேசிய கலை இலக்கியப் போட்டியில் பங்குபற்றி தேசிய மட்டத்தில் வெற்றி பெற்ற இந்த இளங்கலைஞரை இந்நாளில் வாழ்த்துகின்றோம்.

முதலாம் இடம்
சிறுகதை ஆக்கம்
செல்வி புஸ்பராசா சிந்துஜா
மாணவி, யா/சிறிய புஸ்ப மகளிர் மகா வித்தியாலயம், கரம்பொன்.



இவர்களுடன் அரச சிறுவர் சித்திரப்போட்டி, கலை, இலக்கியப் போட்டிகளில் பிரதேச மற்றும் மாவட்ட மட்டங்களில் வெற்றிபெற்று எமது பிரதேசத்திற்குப் பெருமைதேடித் தந்த அனைவருக்கும் இன்றைய நாளில் எமது நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக.

கலாசாரப்பேரவை,
தீவகம் வடக்கு,
ஊர்காவற்றுறை. (கி/54114)

உதவி அரசாங்க அதிபரும், உத்தியோகத்தர்களும்,
உதவி அரசாங்க அதிபர் பணிமனை,
ஊர்காவற்றுறை.

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி
## நாகேஸ்வரி பத்மநாதன்
(ஓய்வுபெற்ற ஆசிரியை)

தோற்றம் 05.11.1949 மறைவு 25.09.2007

பண்பின் சிகரமாய் வாழ்ந்து
பாரிற்கு உதாரணமாய்
பாசத்தின் உறைவிடமாய்
யாவருக்கும் இனியவராய் நல்வழி காட்டி
எமை விட்டுப் பிரிந்ததேனோ?
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவால் துயருறும்:
கணவர், பிள்ளைகள்.

கலைவாணி வீதி,
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில். (67295)

# 4 யாழ். இளைஞர்கள் இராமேஸ்வரத்தில் கைது!

இராமேஸ்வரம்,ஒக்.25

இந்தியக் கடல் எல்லைக்குள் ஊடுருவினர் என்ற சந்தேகத்தின் பேரில் கைதாகித் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஈழத்தமிழர்களிடம் தீவிர விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

குறித்த நால்வரும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளையராஜா, சுதர்சன்,குகனேஸ்வரன் மற்றும் காண்டீபன் என விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 3 தினங்களாக இந்தியக்கடல் எல்லையில் இவர்கள் அலைந்து திரிந்தனர் என்றும், இவர்களின் தகவல்கள் முன்னுக்குப் பின் முரணாக அமைந்துள்ளன என்றும் தெரிவித்த இராமேஸ்வரம் பொலிஸார், குறித்த நால்வரையும் 'கியூ' பிரிவுப் பொலிஸாரிடம் மேலதிக விசாரணைகளுக்காக ஒப்படைத்துள்ளனர். நால்வரும் ஓலைக்குடா கடல் பகுதியில் வைத்து மீன்பிடி வலை மற்றும் சாதனங்கள், படகுடன் செவ்வாய்க்கிழமை கைதாகினர் .

# ஓராண்டு நினைவஞ்சலி

திருமதி
## கெங்காதேவி பீதாம்பரம்

தோற்றம் 09.07.1940 மறைவு 05.11.2006

திதி : 25.10.2007

எங்கள் அன்புத் தெய்வமே எமைவிட்டு நீர் பிரிந்து ஓராண்டு சென்றதம்மா. உங்கள் பிரிவு எங்களை விட்டு நீங்க மறுக்குதம்மா.
உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கணவர், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
பெரியவளவு, புலோலி வடக்கு,
பருத்தித்துறை.
தகவல்: பி.ஜிப்ரா(மகன்)
0212264334
(கி/54112)

# வருடாப்திக அழைப்பு



அன்னை மடியில்: 11.10.1929
ஆண்டவன் அடியில்: 06.11.2006

சென்ற வருடம் 06.11.2006 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்த

திருமதி
## சோமசுந்தர ஐயர் சரஸ்வதி அம்மா

அவர்களின் ஓராண்டு வருடாப்திகம் நிகழும் மங்களகரமான ஐப்பசி 09ஆம் நாள் நாளை (26.10.2007) வெள்ளிக்கிழமை. அன்று எமது இல்லத்தில் ஆத்மசாந்திப் பிரார்த்தனைகள், மதிய போசனம் என்பன நடைபெறும். இந்த வைபவத்தில் அனைவரும் குடும்ப சகிதம் வருகை தந்து கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

எங்கள் அம்மா சரஸ்வதி அம்மா
புண்ணியத்தின் புனிதவதியே
புன்னகையின் ஒளியே நீயம்மா
பாசத்துடன் பழகுவாய்
சிரித்த முகத்துடன் பேசுவாய்
உன் பிரிவால் வாடுகின்றோம் - அம்மா
உன் பிரிவால் வாடுகின்றோம் நாங்கள்.
உன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சிவன் கோயிலடி,
சித்தன்கேணி. (67225)

சோ.இலட்சுமி நாராயணக் குருக்கள்,
சோ.சுப்பிரமணிய சர்மா குடும்பத்தினர்,
சோ.பாலகிருஷ்ண சர்மா குடும்பத்தினர்.

(இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)


# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

927 நீலம்

வெற்றி இலக்கங்கள்

மேடம்

10 13 19 37

23-10-2007

செல்லுபடியாகும் தொடர் இல. 4378156 - 4392630

ஜக்பொட் பரிசு ரூபா.1,000,000/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 299,639 | 10/- | 2,996,390/- |
| 2 இலக்கங்கள் | 27,559 | 20/- | 551,180/- |
| 1 இல. + லக்கினம் | 27,281 | 30/- | 818,430/- |
| 2 இல. + லக்கினம் | 2,476 | 100/- | 247,600/- |
| 3 இலக்கங்கள் | 729 | 500/- | 364,500/- |
| 3 இல. + லக்கினம் | 61 | 5,000/- | 305,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 100,000/- | 300,000/- |
| 4 இல. + லக்கினம் | 1 | 1,000,000/- | 1,000,000/- |
| மொத்தம் | | | 6,583,100/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 357,754 | | 7,606,600/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 1,000,000/-

தொடர் இல. 5267993 க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுக்கள் 2007 ஒக்டோபர் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| அம்பாறை | 4382949-1-96 |
| காலி | 4390295-3-36 |
| மாத்தளை | 4388565-4-[illegible] |
| மாத்தறை | 4379812-5-68 |
| மட்டக்களப்பு | 4387645-1-37 |

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சென் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தென்னிந்திய திருச்சபையின் 60ஆவது ஆண்டு நிறைவையொட்டிய வைரவிழா நிகழ்வுகள் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஒட்லி மண்டபத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. (படங்கள்: நேசன்)

# புதிய ஆயரின் தலைமையில் சிறப்புற நடைபெற்ற தென்னிந்தியத் திருச்சபையின் வைரவிழா நிகழ்வுகள்

வலி.வடக்கு, ஒக். 25

தென்னிந்திய திருச்சபையின் 60ஆவது ஆண்டு நிறைவையொட்டிய வைரவிழா நிகழ்வுகள் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஒட்லி மண்டபத்தில் பேராயர் அதி. வணக்கத்துக்குரிய கலாநிதி டானியல் செல்வரத்தினம் தியாகராசா தலைமையில் அண்மையில் மிகச் சிறப்பாக இடம்பெற்றன.

இறைவனுக்கு நன்றி செலுத்தும் வழிபாடு வட்டுக்கோட்டை தென்னிந்திய திருச்சபை தேவாலயத்தில் இடம்பெற்றது.

இதனைத் தொடர்ந்து வைர விழா நிகழ்வுக்கான நினைவுக் கட்டடத்திற்கான அடிக்கல்லை பிரதம விருந்தினராக கலந்து கொண்ட இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் உப தலைவரும் சட்டத்தரணியுமான எம். எ. சுமந்திரன் நட்டு வைத்தார்.

இதனைத் தொடர்ந்து இடம்பெற்ற நிகழ்வில் நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த பராமச்சாரிய சுவாமிகள், யாழ். மறைமாவட்டத்தின் பிரதம குருவும் சென். பற்றிக்ஸ் கல்லூரி அதிபருமான அருட் கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம், முன்னாள் தென்னிந்திய திருச்சபைப் பேராயர் கலாநிதி எஸ். ஜெபநேசன், செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன், யாழ்பாணக் கல்லூரி அதிபர் என்.எ. விமலேந்திரன், சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக நுண்கலைப்பீட மாணவர்கள், திருமறைக் கலாமன்றம், யாழ்ப்பாணக் கல்லூரி, மூளாய், சுழிபுரம், தென்னிந்திய திருச்சபை மாணவர்கள் ஆகியோரின் இயல், இசை, நாடக கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (203-86)

## நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஒக். 25

வடமராட்சி கல்வி வலய புதிய பாடத் திட்டத்திற்கான செயலமர்வுகள் இன்று வியாழக்கிழமை காலை 8 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளன. அத்துடன் வடமராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் தரம் 6 செயன்முறை தொழிற் நுட்பத்திற்கான செயலமர்வு நாளை வியாழக் கிழமை காலை 8 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை ஞானாசிரியர் கல்லூரியில் நடைபெறவுள்ளது என வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வி. செல்வராஜா தெரிவித்துள்ளார். (203)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஒக். 25

சமூக அபிவிருத்தி மன்றம் நடத்தும் சிறுவர், முதியோர் தின விழா நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு மன்றத்தில் இடம்பெறவுள்ளது.

மன்றத்தலைவி திருமதி நவநீதம் ஜெகதீசன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் வலி. கிழக்கு பிரதேச செயலர் ந. நடராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

இந்நிகழ்வில் சமூக அபிவிருத்தி மன்றத் தலைவி திருமதி நவநீதம் ஜெகதீசனுக்கு 'மழலைகளின் தாய்', 'சகலகலா வல்லி' ஆகிய பட்டங்கள் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளது. (203)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஒக். 25

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் ஆரம்ப வகுப்புகளில் சித்திரபாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 28, 29 ஆகிய திகதிகளில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

ஆசிரியர்களின் வரைதல் திறனை மேம்படுத்தும் நோக்கில் செயன்முறையுடன் கூடிய செயலமர்வு நடத்தப்படவுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் அறிவித்துள்ளார். (203-207)

### காட்டாற்று வீதி சேதம்

யாழ்ப்பாணம், ஒக். 25

வலி. தென்மேற்கு பிரதேச சபை எல்லைக்குள் இருக்கும் காட்டாற்று வீதி மிகவும் மோசமான நிலையில் சேதம் அடைந்து காணப்படுவதினால் விவசாயிகளும் ஏனையவர்களும் போக்குவரத்து செய்ய முடியாத நிலைமை காணப்படுகின்றது.

மாதகல் பகுதியையும் விளானையும் இணைக்கும் சுமார் இரண்டு கிலோ மீற்றர் தூரம் வரையான இவ்வீதி மிகவும் சேதமடைந்து காணப்படுகின்றமையால் அப்பகுதியில் ஆயிரக் கணக்கான நிலப் பரப்பில் நெற் செய்கை, தோட்டம் செய்யும் மக்கள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகியுள்ளார்கள். (203)

# மீன்பிடித் தடையால் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீனவக் குடும்பங்கள் பொருளாதார நெருக்கடிக்குள்

## பல குடும்பங்கள் பட்டினிச்சாவை எதிர்நோக்கும் நிலையில்

யாழ்ப்பாணம், ஒக். 25

குடாக்கடலில் கடந்த 12 நாள்களாக மீன்பிடிப்பதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதால் இக் கடலில் தொழில் செய்து வந்த ஆயிரக்கணக்கான குடும்பங்கள், பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்கின்றன.

இந்நிலை தொடர்ந்தால் பல குடும்பங்கள் பட்டினிச்சாவை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

குடாக்கடலில் கொழும்புத்துறை, பாஷையூர், குருநகர், நாவாந்துறை ஆகியகிராமங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் மீன்பிடித் தொழிலை மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த 13 ஆம் திகதி குடாக்கடலில் ஏற்பட்ட மோதல் சம்பவத்தை அடுத்து அந்தக் கடல் பிரதேசத்தில் மீன்பிடிப்பதற்கு படையினர் அனுமதி மறுத்து வருகின்றனர்.

இதனால் எந்தவித வருமானமுமின்றி இப் பிரதேச மக்கள் பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்கின்றனர்.

இந்த மீனவர்களால் கடலில் விடப்பட்டுள்ள தொழில் உபகரணங்களை தினமும் ஒரு சிலர் சென்று வருவதற்கு மட்டுமே படையினர் அனுமதித்து வருகின்றனர்.

அன்றாட வருமானம் மூலம் தமது ஜீவனோபாயத்தை நடத்தி வந்த இக்குடும்பங்கள் தற்போது எந்தவித வருமானமுமின்றி பொருளாதார ரீதியில் பெரும் பாதிப்படைந்துள்ளன.

பல குடும்பங்கள் பட்டினியில் வாடுகின்றன. இந்த நிலை தொடர்ந்தால் பட்டினிச் சாவு ஏற்படும் அபாயம் உள்ளது என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்த விடயத்தைக் கவனத்தில் எடுத்து உரிய தீர்வைப் பெற்றுத்தர வேண்டும் எனவும்-

பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அவசர நிவாரண உதவியை உடனடியாக வழங்க உயர் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்படுகின்றது. (202)

# மல்லாகம் சந்தியில் உள்ள வாய்க்காலில் வெள்ளம் தேங்கியுள்ளதால் மக்கள் சிரமம்!

யாழ்ப்பாணம், ஒக். 25

மல்லாகம் சந்தியில் காணப்படும் வெள்ள வாய்க்காலினால் வாகனங்களும் பாதசாரிகளும் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகி வருகின்றார்கள்.

தூர்ந்து போயிருந்த வெள்ள வாய்க்கால் கடந்த ஆண்டு வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் துப்பரவு செய்யப்பட்ட வேளையில் முறையாக அகழ்ந்தெடுத்து துப்புரவு செய்யப்படவில்லை.

தற்போது இவ்வாய்க்காலில் வெள்ளம் தேங்கி வீதி மட்டத்தில் காணப்படுவதினால் வெள்ளவாய்க்கால் தெரியாது பாதசாரிகள் அதற்குள் காலை விட்டு விழுந்து எழும்புவதுடன், எதிரில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு செல்லும் வாகனங்களும் இந்த வெள்ள வாய்க்காலில் அகப்பட்டு சிரமங்களுக்கு உள்ளாகின்ற நிலைமை காணப்படுகின்றது.

உரிய வெள்ளவாய்க்காலை நீர் தேங்கும் வெள்ளவாய்க்காலாக விடாது வெள்ளம் ஓடும் வாய்க்காலாக மாற்ற வேண்டும் என அப்பகுதியில் உள்ள பலரும் கேட்டுள்ளனர். (203)

# கட்டட வேலைகள் முடிவடைந்த நிலையில் ஒதுக்கப்பட்ட நிதி கிடைப்பதில் தாமதம்

## கைதடி கிராம அபிவிருத்திச் சங்கம் ஒன்று விசனம்

யாழ்ப்பாணம், ஒக். 25

கைதடியில் உள்ள கிராம அபிவிருத்திச் சங்கம் ஒன்று கட்டட வேலைகளைமேற்கொள்ளவென சாவகச்சேரி பிரதேச சபையுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் தமக்கான கொடுப்பனவுகள் இன்னும் கிடைக்கவில்லை என்று விசனம் தெரிவித்துள்ளது.

கட்டட வேலைகள் நிறைவு செய்யப்பட்டுள்ள நிலையிலும் இந்நிதி கிடைக்கவில்லை என்று மேலும் கூறப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பிரதேசசபையிடம் கேட்ட போது கொடுப்பனவுக்கான உறுதிச் சீட்டுகள் தென்மராட்சி பிரதேச செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அங்கு கூறப்பட்டது.

தென்மராட்சி பிரதேச சபைக்கு சென்று கேட்டபோது, இதற்கான நிதி இன்னும் கிடைக்கவில்லை. கிடைத்ததும் வழங்குவோம் என்று கூறப்பட்டது. தேவை எனின் யாழ். செயலகத்திற்குச் சென்று விசாரிக்குமாறும் கூறினர்.

யாழ். செயலகத்திற்குச் சென்று கேட்ட போது கொழும்பில் இருந்து இன்னும் இதற்கான நிதி வந்துசேரவில்லை என்று மொட்டையாகக் கூறியுள்ளனர் என்று குறிப்பிட்ட கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

தற்போது இக்கிராம அபிவிருத்தி சங்கத்தினர் செய்வதறியாத நிலையில் உள்ளனர்.

தாம் மேற்படி வேலைக்காக பிறிதொருவரிடம் கடனாக வாங்கிய நான்கு லட்சம் ரூபாவுக்கும் கடந்த நவம்பர் மாதம் தொடக்கம் வட்டி செலுத்தவேண்டியுள்ளதாகவும் கூறுகின்றார்கள்.

மேலும் கூடிய விலைக்கு சிமெந்து உட்பட சகல பொருள்களையும் பெற்று இதனை நிறைவேற்றியதாகவும் தெரிவிக்கின்றனர். அத்துடன் நிதிவரத் தாமதமாகும் என்றால் ஏன் மேற்படி வேலையை உடனடியாக முடிக்குமாறு பிரதேச சபையினரும் பிரதேச செயலகத்தினரும் பதிலளித்தார்கள் என்பது புரியதாத புதிராக இருப்பதாகவும் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் ஆச்சரியப்படுகின்றனர்.

அத்துடன் ஒதுக்கப்பட்ட நிதி வரவில்லையென்றால் எப்படி வேலைக்கு ஒப்பந்தம் செய்யலாம் எனவும் கேள்வி எழுப்புகின்றனர்.

எனவே, இவ்விடயத்தில் அரச அதிபர் உடன்டிக் கவனமெடுத்து இக்கொடுப்பனவை விரைவில் வழங்க ஆவன செய்ய வேண்டும் என்று குறிப்பிட்ட கிராம அபிவிருத்திச் சங்கத்தினரினால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக சாவகச்சேரி பிரதேச செயலரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டுள்ளது. (203-288)

# வரணிப் பகுதியில் ஆள்கள் இல்லாத காணிகளில் மரங்கள் வெட்டப்படுகின்றன

## பாதிக்கப்பட்ட மக்கள் கவலை தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 25

வரணிப் பகுதியில் ஆள்கள் இல்லாத வீடுகளில் விறகுக்காக மரங்கள் தறிக்கப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

வடமராட்சிப் பகுதியிலிருந்து சைக்கிளில் வருவோர் ஆள்கள் இல்லாத காணிகளிலும் வேலிகளிலும் உள்ள மரங்களை தறித்து எடுத்துச் செல்வதாகவும், இதனைத் தடுக்கச் செல்வோரை கத்தி போன்ற ஆயுதங்களைக் காட்டி அச்சுறுத்துவதாகவும் தெரிவித்தனர்.

இடம்பெயர்ந்துள்ள குடும்பங்களின் காணிகளில் உள்ள மரங்களை வெட்டுவதுடன் தென்னை மரங்களில் உள்ள தேங்காய்களையும் திருடிச் செல்வதாகக் கூறப்படுகிறது.

இதனால் காணிகளின் சொந்தக்காரர்கள் பெரும் கவலையடைந்து வருவதுடன் செய்வதறியாது நிற்கின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக உரிய அதிகாரிகளுக்குத் தெரிவித்தும் பயன் எதுவும் கிடைக்கவில்லை என்று காணி உரிமையாளர்கள் கவலைத் தெரிவிக்கின்றனர். (203-207)

### நவாலி போதுமண்டபத்திற்கு கால்நடை வைத்திய அதிகாரியை மாதத்தில் ஒரு முறை வருமாறு அழைப்பு


நவாலி, ஒக். 25

நவாலியில் கால்நடை வளர்ப்போருக்கு ஆலோசனை வழங்குவதற்கு மாதத்தில் ஒரு முறையாவது நவாலி பொது மண்டபத்திற்கு கால்நடை வைத்திய அதிகாரி வருகைதர வேண்டும் என்று அப்பகுதி மக்கள் கேட்டுள்ளனர்.

இந்தப் பொது மண்டபத்திற்கு வருகை தருவதன் மூலம் கால்நடை வளர்ப்போர் அதற்குரிய ஆலோசனைகளையும் மருந்து வகைகளையும் இலகுவில் பெறமுடியும் என்று நவாலி கிராம அபிவிருத்திச் சங்கம் தெரிவித்துள்ளது. (203-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாம் ஆண்டு நினைவுச்சுவடுகள்...



உதயம்
25.06.1946

அஸ்தமனம்
27.10.2004

திதி: பூரணை (25.10.2007)

அப்பா!
கடல் போல எம் மனம் கொந்தளிக்க – அதிலோர்
மடல் போல அடிபட்டுப் போனது ஏனோ?
நிழல் போல எமக்குக் குளிர் தருவீர்கள் என்றிருக்க
தணலாய் போய் எம்மை சுட்டது ஏனோ?
ஒரு கோடி துயரங்கள் இதயத்தில் இருந்தபோதும்
இரு விழிகள் போதவில்லை அழுவதற்கு....
ஒளி நிலவாம் உம் படத்தை உருக்கமோடு பார்த்திருப்போம்
இதயமாம் ஏடுகளில் உம் புகழை எழுதிவைத்துக் காத்திருப்போம்
மறுபிறப்பு என்று ஒன்றிருந்தால் – மறுபடியும்
மாசற்ற எம்மனையில் மகிழ்ந்திடவே வாருங்களப்பா!
ஈரவிழிகளுடன் மறுபடியும் உங்கள் வதனம் காண
ஆத்மசாந்திக்காகப் பிரார்த்தித்துக் காத்திருக்கின்றோம்.

அமரர்
## சுப்பிரமணியம் செல்வராசா (செல்வம்)
(உரிமையாளர், "வாணி ரெக்ஸ்",
சாவகச்சேரி)

குடும்பத்தினர்.

கென்ஸ்மன் லேன்,
டச்சு றோட், சாவகச்சேரி.

(சி/54104)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி
## அமரர் நாகமுத்து வேலுப்பிள்ளை



மலர்வு
01.04.1918

உதிர்வு
05.11.2006

திதி:பௌர்ணமி

அன்பாக எம்மை அரவணைத்து
பண்புடன் வாழ வழிகாட்டி
எங்களை வாழ வைத்த தெய்வமே!
எங்கள் வீட்டு ஒளி விளக்கே!
எங்கு சென்றீர் எம்மை விட்டு.....
நீங்கள் மறைந்தாலும் உங்கள் நினைவுகள்
ஒருபோதும் எம்மை விட்டு நீங்காது
இனி என்று காண்போம் உம் திருமுகத்தை

இன்று (25.10.2007) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பழை'' தோட்டம்,
கம்பர்மலை,
வல்வெட்டித்துறை.

(67189)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னி மீதான படையெடுப்பை தடுப்பதே புலிகளின் நோக்கம்!

## அநுராதபுரம் விமானத்தளத் தாக்குதல் அதற்காகவே என்கின்றார் வீரவன்ஸ

கொழும்பு, ஒக். 25

''புலிகளின் பயங்கரவாதத்திற்குள் சிக்கியிருக்கும் வன்னித் தமிழ் மக்களை மீட்டெடுப்பதற்காகப் படையினர் ஆரம்பித்திருக்கும் படையெடுப்பைத் தடுத்து நிறுத்துவதற்காகவும், அமெரிக்கா போன்ற சர்வதேச நாடுகளின் சதி வலையில் இலங்கையைச் சிக்க வைப்பதற்காகவுமே புலிகள் அநுராதபுரம் விமானப் படைத்தளம் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.''

- இவ்வாறு ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் அறிக்கை ஒன்றை வெளியிட்டு உரையாற்றுகையில் கூறினார்.

எனினும் இந்தத் தாக்குதலுக்கு அரசின் பக்கத்தில் உள்ள பலவீனங்களே முக்கிய காரணங்கள் என்றும் அவர் சுட்டிக் காட்டினார். சபையில் வீரவன்ஸ எம்.பி. மேலும் கூறியவைதாவது:-

அநுராதபுரம் விமானப்படைத் தளத்திற்குள் 21 கரும்புலிகள் நுழைந்து தாக்குதல் நடத்தினர் என்று நாம் அறிந்தோம்.

புலிகள் கிழக்கில் பாரிய தோல்வியடைந்து, அங்கிருந்து ஓடிவிட்டனர். அந்தத் தோல்வியை ஈடுசெய்வதற்காக - அதை மூடி மறைப்பதற்காக - புலிகள் முயன்று வருகின்றனர்.

கிழக்கின் வெற்றியைத் தொடர்ந்து, வடக்கு மீதும் தாக்குதல் தொடுத்து அங்கு புலிகளின் பயங்கரவாதத்திற்குள் சிக்கியிருக்கும் மக்களை மீட்டெடுக்கப் படையினர் முயன்று வருகின்றனர்.

புலிகள் தற்போது, அவர்களிடம் எஞ்சியிருக்கும் வன்னியைத் தக்க வைத்துக்கொள்ளப் பெரிதும் பாடுபடுகின்றனர். அத்தோடு, சர்வதேச மட்டத்தில் இலங்கையைச் சிக்க வைக்கவும் சர்வதேசத்தின் தலையீட்டை இலங்கையில் அதிகரிக்கச் செய்யவும் புலிகள் முயன்று வருகின்றனர்.




அரசு தமக்குள் இடம்பெறுகின்ற ஊழல் நடவடிக்கைகளை உடன் நிறுத்தவேண்டும். அப்போதுதான் படை நடவடிக்கைகளை செம்மையாகக் கொண்டு செல்லமுடியும்.

இலங்கையில் தலையீட்டை அதிகரிக்க அமெரிக்காவும், ஐ.நாவும் முயன்று வருகின்றன. அந்த முயற்சியை வெற்றிபெறச் செய்யவே புலிகள் முயன்று வருகின்றனர் - என்றார். (சி)

## சென். பற்றிக்ஸ் பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஒக். 25

யாழ். சென்பற்றிக்ஸ் கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு விழா நாளை வெள்ளிக்கிழமை காலை 9.45 மணிக்கு கல்லூரியின் மத்தியூஸ் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ். ஆயர் அதிவண. தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகை தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ். மாவட்ட நீதிபதி இ.த. விக்னராஜாவும் அவரது பாரியார் திருமதி சாந்தி விக்னராஜாவும் கலந்துகொள்வர். (அ-203)

# காந்தி பிறந்த மண்ணிலிருந்து தமிழரை அழிக்க ஆயுதங்கள்

## அடைக்கலநாதன் எம்.பி. விசனம்

இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையிலான உறவு தொப்புள் கொடி உறவு என்று கூறும் இந்தியா, இங்கு அப்பாவி தமிழ் மக்கள் கொன்று குவிக்கப்படும்போது மௌனம் சாதிப்பது ஏன்? அஹிம்சை வழியில் சமாதானத் தையும் சுதந்திரத்தையும் பெற்றுக்கொடுத்த காந்தி பிறந்த மண்ணில் இருந்து தமிழர் களை அழிப்பதற்கு ஆயுதம் கொடுத்து உதவு வது பெரிதும் வேதனைக்குரியது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் விசனம் தெரிவித்தார்.

உள்ளூராட்சி சபைகள் தேர்தல் திருத்தச் சட்டம் தொடர்பான விவாதத்தில் உரையாற்றிய செல்வம் அடைக்கலநாதன் மேலும் கூறியாவது:-

இந்தியா எம்முடன் தொப்புள் கொடி உறவுண்டு என்று கூறிக்கொள்வதில் அர்த்தம் இல்லை. இந்தியா செல்வாக்கு மிக்க ஒரு நாடு. எமது நிலை தொடர்பாக ஒரு வார்த்தை கூறினால் போதும், பிரச்சினைகள் தீர்ந்துவிடும். ஆனால் இவ்வளவு அட்டூழியங்கள் நடந்தும் இந்தியா மௌனமாக இருப்பது ஏன்?

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதிக்கு புகழ்பாடினார். புலிகள் மீது வசை பாடினார். அவர் அப்படிப் பேசாவிட்டால் அவ ரும் காணாமல் போய்விடுவார்.

துணிவிருந்தால் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஒற்றை ஆட்சி முறையை ஆதரிக்கின்றாரா இல்லையா என்பதை வெளிப் படையாகக் கூறுவாரா?

நாளாந்தம் மனிதப் படுகொலைகள்

எமது பிரதேசத்தில் நாளாந்தம் மனிதப் படுகொலைகள் இடம்பெறுகின்றன. புத்தி ஜீவிகள், கிராமசேவகர்கள், இளைஞர்-யுவதிகள், மாணவர்கள் தொடர்ச்சியாகக் கொல்லப் படுகின்றனர்.

இப்படுகொலைகளுக்கு அரசும் அரச படைகளுடன் துணைப்படைகளாக செயற்படும் ஆயுதக் குழுக்களுமே பொறுப்பேற்க வேண்டும்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் புலிகளை அழிக்கின்றோம் என்று கூறிக்கொண்டு அப்பாவித் தமிழ் மக்களைக் கொன்று குவிக்கின்றீர்கள்.

புதுக்குடியிருப்பில் மக்களின் மனைகள் மீது குண்டுகள் போடப்படுகின்றன. கர்ப்பிணிகள், இருதய நோயாளர்கள், மாணவர்கள் உட்பட அனைவரும் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆனால், சர்வதேசம் கூட அக்கறை காட்டவில்லை - என்றார். (சி)

# சற்றும்கூட எதிர்பார்க்கவேயில்லை என்கிறீர்களே! நோட்டீஸ் கொடுத்துவிட்டா புலிகள் அடிப்பார்கள்?

## கெஹலியவின் கருத்துக்கு ஐ.தே.கட்சி கிண்டல் கேள்வி

கொழும்பு, ஒக். 24

''புலிகள் தாக்குதல் நடத்துவார்கள் என்று அரசும் படையினரும் சற்றும் எதிர்பார்க்கவேயில்லை என்று அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல கூறுகின்றாரே, அப்படியென்றால் புலிகள் உங்களுக்கு நோட்டீஸ் கொடுத்துவிட்டா வந்து அடிப்பார்கள்?''

இப்படிக் கிண்டலாகக் கேள்வி எழுப்பியிருக்கிறார் ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் செனிவிரட்ண.

வடக்கு மாகாணத்தில் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களை நடத்துவதற்கான சட்டத்திருத்தம் தொடர்பான விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இப்படிக் கூறினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றும் போது கூறியதாவது:-

நாடு தீப்பற்றி எரிகின்றது. அரசு தமாசாக்களை நடத்துகின்றது.

ஒரு தேர்தலை நடத்தும்போது அங்கே அமைதியும் சமாதானமும் ஏற்படுத்தப்பட வேண்டும். ஆனால் இப்பொழுது சமாதானம் நிலவுகின்றதா? பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளதா?

அண்மையில் இடம்பெற்ற அரச வைபவம் ஒன்றின்போதும் ஜனாதிபதியின் முன்னிலையில் கோத்தாபாய ராஜபக்ஷ, அமைச்சர்களுக்கு விளக்கம் அளிக்கின்றார். இவர் அரசியல்வாதி அல்லர், ஒரு சாதாரண சிவில் உத்தியோகத்தர் மட்டுமே.

ஆனால் ஜனாதிபதியின் சகோதரர் என்ற தகைமையை விட வேறு எதுவும் இல்லை. இவர் அரசியல்தலைவர்போல்செயற்படுகின்றார்.

கதிர்காமத்தில் யால பிரதேசத்தில் தாக்குதல்களை நடத்திய சூடு தணியும் முன்னர் புலிகள் அநுராதபுரத்தில் விமானப்படைத் தளத்தைத் தாக்கிவிட்டனர். அங்கே பல ஆயிரம் கோடி பெறுமதியான விமானங்களையும் படை வீரர்களையும் இழந்துவிட்டோம். உண்மையாகவே அங்கு நடந்தது என்ன? அமைச்சர் மாறுபட்ட விவரங்களைக் கூறுகின்றார். அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல புலிகளின் விமானம் கட்டுக்கதை என்று கூறுகின்றார்.

இத்தாக்குதலை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். ஆனால் இவ்விடயத்தில் ராஜபக்ஷ சகோதரர் கம்பெனியினர் மட்டுமே சந்தோஷம் அடைகின்றனர். மேலும் ஒரு குறைநிரப்புப் பிரேரணை மூலம் பழைய விமானங்களை வாங்க முடியும். அதில் பல கோடிகளை கொமிஷனாகப் பெற முடியும் என்பதால் -

ஏற்கனவே மிக் விமானக் கொள்வனவு தொடர்பாக நாம் ஆட்சேபனை கிளப்பினோம். இந்த விமானங்கள் 21 வருட பழைமை வாய்ந்தவை, யுத்தம் செய்யத் தகுதியற்றவை என்பதை அப்போதே கூறினோம். அது இப்பொழுது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அரச படைத்தளங்கள் அமைந்துள்ள பிரதேசங்களின்மேல் ஒரு சிறு பறவைகூட பறக்க முடியாது. பாதுகாப்பு வலை அமைப்புகள் அனைத்தும் உசார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய மார்தட்டினார்.

ஆனால் புலிகள் மூன்றாவது தடவையாகவும் விமானத் தாக்குதல்களை நடத்திவிட்டு பாதுகாப்பாக திரும்பிச் சென்றுவிட்டனர்.

பல ஆயிரம் கோடி ரூபா செலவில் கொள்வனவு செய்யப்பட்ட ராடர்களும் மிக் விமானங்களும் எங்கே போயின? பாதுகாப்பு வலை அமைப்பு செயல் இழந்து விட்டதா?

இவற்றுக்குப் பொறுப்பான விமானப் படைத் தளபதியும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும் உடனடியாக இராஜிநாமா செய்யவேண்டும். - என்றார். (சி)

## மனம் என்பது ஒரு விஷப்பாம்பு

மனம் என்பது ஒரு விஷப் பாம்பு. அதற்கு இரண்டு குணங்கள் உண்டு.

பாம்பு எப்போதும் வளைந்து வளைந்து செல்லும். நேரான பாதையில் செல்லாது.

வழியில் கிடைக்கும் எதையும் சட்டென்று பற்றிக்கொள்ளும். மனமும் இதைப் போன்றதே. மனதை அடக்குவது வெகு சுலபம். முயற்சி செய்து பார்த்தும் முடியவில்லை என்று பல பேர் சொல்கிறார்கள். ஒரு மனிதன் காரோட்டக் கற்றுக்கொள்கிறான். அவனை ரோட்டைப் பார்த்து ஓட்டு. கையை காலை இப்படி பயன்படுத்து. எப்போதும் தயார் நிலையில் வைத்துக்கொள் என்றெல்லாம் சொல்லிக் கொடுக்கத் தேவையில்லை. ஆரம்பத்தில் கை, கால்கள், மனம் எல்லாவற்றையும் ஒரு நிலைப்படுத்தி செயற்படுத்துவது கஷ்டமாகத் தான் இருக்கும். ஆனால் இடைவிடாத சாதனையால் அவனது பார்வை கை, கால்கள், இயக்கம், மனக்கட்டுப்பாடு இவையெல்லாம் கட்டுக்குள் வந்து விடுகின்றன.

அப்படித்தான் இந்திரியங்களை அடக்கிய பின் காரோட்டுவது சுலபமாகி விடுகிறது. சில சமயம் அவன் காரோட்டிக் கொண்டே பக்கத்திலிருப்பவரிடம் பேசவும் செய்கிறான். அப்படிப் பேசுவது அவன் கவனத்தைச் சிதறடிப்பதில்லை.



மனம் ஒரு தாமரை. இதில் எழும் ஆசைகள் பிரமைகள் எல்லாவற்றையும் வண்டுக்கு ஒப்பிடலாம். இந்த ஆசைகள் இன்பத்துக்கும் துன்பத் திற்கும் காரணம். மனதின் ஆசைகளைப் பற்றிக்கொண்டு அவற் றால் அவதியுறக்கூடாது. மனதைப் பின்பற்றிப் போனால் மாயை யில் விழ வேண்டிவரும்.

மனதை ஆதாரமாகக் கொண்டு வாழும் மனிதன் வண்டை விட மோசமாகத் தன் வாழ்க்கையைப் பாதித்துக் கொள்வான். தன் மனச் சாட்சியையும் புத்தியையும் துணை கொண்டு வாழ்பவன் (தெய்வீகத்தை) இந்த உலகிலேயே தெய்வமாக மாற்றமடைவான்.

சாயி சிந்தனை


மருதனார்மடத்தில் என்னவாம்.....

கொட்டும் மழையிலும் யாழ். நகர் கண்டிராத மக்கள் வெள்ளத்தில்

எங்கள் முயற்சிகளுக்கு நீங்கள் அளித்துவரும் ஆதரவுக்கு நன்றி...!! மாபெரும் வெற்றிக்கடலில் நாங்கள்....!!



மாபெரும் கலைக் கண்காட்சி

வர்ணமொழி 2007

இடம்: இராமநாதன் நுண்கலைக்கழகம் (மருதனார் மடம்)

திகதி: 20-26 ஐப்பசி 2007

நேரம் : மு.ப 8.30 - பி.ப 3.30

யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைத்துறை மாணவர்களின் முயற்சியில்... வெற்றிகரமான வெற்றிப் பயணத்தில்...

வியக்கவைக்கும் விநோத படைப்புகள்... கலையுலக மாணவர்களின் கலைத்துவமான திறமைகள்.....

யாழ். மண்ணில் வியத்தகு கலையுலகம் இது....!!

பிரவேசம்: பாடசாலை மாணவர்களுக்கு 10.00

ஏனையோருக்கு 20.00, 100.00

அனுசரணை: CB COMPUTER ACADEMY

Station Road, Kondavil. 021 4590291


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவுகள்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 08 | 05 |
| ★ | ★ |
| 03 | 11 |
| ★ | ★ |
| 1926 | 2006 |

திருமதி
### கயிலாசபிள்ளை பறுவதம்

*திதி: ஐப்பசி பூரணை 25.10.2007*

**ஓராண்டு ஆனதம்மா நீங்கள் எம்மைவிட்டு பிரிந்து**
**ஓராயிரம் எண்ணங்கள் எம் உள்ளத்தில்**
**ஓடோடி வருவாய் எம் இடத்தில் என்று**
**ஓங்காரமாய் ஒலிக்குதம்மா உன்குரல் எம் செவியில்**
**ஓயாது உம் நினைவு எமைவிட்டு பிரிந்தாலும்**
**சீராக எமை ஆளாக்கிய அம்மாவின் ஆத்மா சாந்திபெற**
**தினமும் வேண்டுகின்றோம் இறைவனை.**

*ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம்சாந்தி!!!*

V.V.K.
'கமலாம்பிகா பவனம்'
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில். (67138)

பிரிவால் துயருறும்:
**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்,**
**உற்றார், உறவினர்.**

## 23 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| அன்னையின் மடியில் | இறைவனின் அணைப்பில் |
|---|---|
| 11 | 25 |
| ★ | ★ |
| 04 | 10 |
| ★ | ★ |
| 1972 | 1984 |


### செல்வி வீரசிங்கம் நிமாலினி
(பாப்பா)

என் அன்பு மகளே!
என்னை தாய் என்று உலகிற்கு காட்டினாய்
அன்று உன்னை அள்ளி எடுக்கையில்
நான் கொண்ட மகிழ்ச்சிக்கு அளவே இல்லையம்மா!
வளமுடன் வாழ்வாய் என கனவு கண்டோம்!
வழியில் உன் வாழ்வு நிறையும் எனக் கண்டோமா?
முதுமையில் எமக்கு உதவியாக இருப்பாய் என்று நினைத்தேன்
எழுந்திடும் அலைகள் மறைவது போல் மறைந்தாய்!
எம் நினைவில் என்றும் நிற்கும் எம் அன்புச் செல்வமே!
உன் அருகில் நாம் வரும் வரைக்கும்
கண்ணீர் மலர்கள் தூவி அஞ்சலிக்கின்றோம்.

*34/1, இராமநாதன் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (67132)

அன்பு அப்பா, அம்மா,
தம்பிமார், தங்கைமார்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்
## வீட்டுக் கிருத்திய அழைப்பும்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 23 | 25 |
| 12 | 09 |
| 1933 | 2007 |

### அமரர் கனகசிங்கம் சதானந்தம் (ஆனந்தம்)

[ஓய்வுபெற்ற நீதிமன்ற வெலியாத்து உத்தியோகத்தரும் ஸ்ரீ பூதேஸ்வர சிவன் தேவஸ்த்தான ஆதீன தர்மகர்த்தாவும், அகில இலங்கை சமாதான நீதிவானும்]

*25.09.2007 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் கனகசிங்கம் சதானந்தம் அவர்களின் வீட்டுக் கிருத்திய கிரியை இன்று (25.10.2007) வியாழக்கிழமை காலை 6 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும்.*

*அன்னாரின் இறுதிக்கிரியைகளின் போது கலந்து கொண்டவர்களும் தனிப்பட்ட அழைப்பு கிடைக்கப் பெறாதவர்கள் எம்மை மன்னித்து இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று அனைவரும் இவ் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

ஸ்ரீ பூதேஸ்வரர் சிவன் கோவிலடி,
நுன்னாலை தெற்கு, கரவெட்டி. (67062)

**மனைவி,**
**பிள்ளைகள்.**

## கோழிக்குஞ்சு விநியோகம்

BAHIRAHA புறொயிலர் குஞ்சுகள், PIRIMA சிவப்பு, வெள்ளைப் பேட்டுக் குஞ்சுகள், 26.10.2007 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும். தொடர்பு:

**ராஜீவ்,** *நவாலி வீதி, ஆனைக்கோட்டை.*
*(67135)* T.P.: 222 3529, 222 2867

## அருள் முருகன் திருமணப் பணியகம்

திருமணப் பணிகளுக்கான
தொடர்புகள் 021 222 9334
**அருள் முருகன் இல்லம்,**
*03, யாழ்.வீதி, சிறாம்பியடி லேன்.*
*(பெருமாள் கோயிலடி), யாழ்ப்பாணம்.*
(67276)

## மணமகள் தேவை

கனடா PR உள்ள இந்து கௌரவ குடும்பத் தைச் சேர்ந்த A/L படித்த 1973 இல் அச்சுவினி முதலாம் பாதத்தில் பிறந்த மணமகனுக்கு A/L இற்கு குறையாத கல்வியுடன் நிறமான அழகிய மணமகள் தேவை.

*தொடர்பு:- 060 221 4471*
**முருகமூர்த்தி கோவிலடி, கருவேலடிலேன், கொக்குவில் கிழக்கு.**
(67280)

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1975, திருவாதிரை, கிரகபாவம் முதற்சுற்று 22 மூன்று சுற்றும் 32, செவ்வாயாலான கிரகபாவம் 6, உயரம் 5' 7" ஆசிரியை (விஞ்ஞான பட்டதாரி)க்கு மணமகன் தேவை. வலிகாமத்தைச் சேர்ந்தவர்கள் விரும்பத்தக்கது. தொடர்பு கொள்ளவும்.
**மே/பா. உதயன் 5020** *(67283)*

*தற்போது விற்பனையில்*
**2007 புதிய பாடத்திட்டத்திற்கு அமைவான**

## பௌதிகவியல் தரம் - 10

பாடமும் பயிற்சியும்.
**திரு.செ.அன்ரன்**
S.L.P.S-I Class -1, SPL.Sc.Td.1st Class
வெளியீடு:
**ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை,**
235,காங்கேசன்துறை வீதி,யாழ். T.P.9481
(B/54108)

## கந்தபுராணப்படிப்பு

சுழிபுரம் மேற்கு பெரியதம்பிரான் கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தில் கந்த புராணப் படிப்பு கடந்த 22 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

தொடர்ந்து மூன்று மாதங்களுக்குத் தினமும் பிற்பகல் 2 மணிக்கு இந்த கந்த புராணப் படிப்புஇடம் பெறும்என்றுஅறிவிக்கப்பட்டுள்ளது.

தினமும் ஒவ்வொருவரின் உபயமாகப் படிப்பு நடைபெற்றுவருகின்றது. கந்த புராணப் படிப்பு பூர்த்தியானதும் கந்தபுராண ஏடுகள் யாவும் தேரில் வைத்து வீதியுலாவாக எடுத்துச் செல்லப்படவுள்ளது.(28)

### வலி.மேற்கில் புதிய குடும்ப அட்டை

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மக்களின் குடும்ப அட்டை புதிப்பிக்கப்பட்டு வருகின்றது. இவ்வாரம் முதல் இது நடைபெற்று வருகின்றது.

புதிய பதிவு அட்டைக்கு 10 ரூபாய் கிராம அலுவலரிடம் வழங்கிப் பெற்றுக்கொண்டு புதிய அட்டையிலுள்ள விவரங்களை எழுதிக் கிராம அலுவலரிடம் ஒப்படைக்க வேண்டும்

புதிய அட்டை மூலமே பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் பங்கீட்டுப் பொருள்களைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

பிரதேச செயலர் ஒப்பத்துடன் புதிய குடும்பப்பதிவு அட்டைகளை இம்மாதத்திற்குள் யாவரும் பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது. (203-28)

## மது கல்வி நிறுவனம்
### பரிசுத்தினம் - 2007

இன்று (25.10.2007) காலை 8.30 மணிக்கு நிலைய பிரதான மண்டபத்தில் பரிசுத்தினமும் வாணி விழாவும் நிறுவன அதிபர் திரு.S.K.கிருபாகரன் தலைமையில் நடைபெறும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மது கல்வி நிறுவனம்,
டச்சு வீதி, இருபாலை, கோப்பாய்

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

## இந்நாளில் பாராட்டி வாழ்த்துகின்றோம்

கடந்த புலமைப்பரிசில் பரீட்சையில் (2007) சித்தியடைந்த எமது கல்வி நிறுவன மாணவர்களான


பா.நிலோஜினி (புள்ளி-164)


ப.சஞ்சிகா (புள்ளி-157)


வி.சிவரஞ்சினி (புள்ளி-156)


பு.பௌசிகா (புள்ளி-152)


பு.தனுலக்ஷன் (புள்ளி-150)


ந.குகப்பிரியா (புள்ளி-142)

ஆகியோரை மேலும் பல சிறப்புகள் பெறப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

மது கல்வி நிறுவனம்,
டச்சு வீதி, இருபாலை, கோப்பாய். (67062)

அதிபர், ஆசிரியர்கள்,
பெற்றோர்கள்.

## மரண அறிவித்தல்



### துரையப்பா கோபாலகிருஷ்ணன்
(ஆங்கில ஆசிரியர்)

யாழ். வண்ணார்பண்ணை, நாச்சிமார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் கணுக்கேணி கிழக்கு, முள்ளியவளையை வசிப்பிடமாகவும் கொண்ட துரையப்பா கோபாலகிருஷ்ணன் 23.10.2007 செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற துரையப்பாப்பத்தர் - தங்கம்மா தம்பதியரின் இளைய மகனும் விவேகவதியின்(லீலா) அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான இராசதுரை, பரமானந்தம், திருநாவுக்கரசு, சண்முகராசா தையல்நாயகி, மற்றும் உருத்திரமணிதேவி ஆகியோரின் சகோதரனும் அமரர்களான சாய்ராம், கணேசராம் மற்றும் சண்முகராம், கலாரஜனி, ஜெயராம், கோகிலராம், அனிதா, பஷ்பராம் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (24.10.2007) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*34, கேசாவில் பிள்ளையார் கோயில் வீதி,*
*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்.* *(67274)*

தகவல்:
உருத்திரமணிதேவி - திருச்செல்வம்.

## விழிநீர் சொரியும்
## ஈராண்டு நினைவு



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 10 | 17 |
| 04 | 10 |
| 1986 | 2005 |

### செல்வி பாலசுப்பிரமணியம் அர்ச்சனா

*திதி: பௌர்ணமி 25.10.2007*

***கண்ணீர் துளிர்க்கையிலே நீ காற்றாகிப் போனதென்ன?***
எண்ணுகின்றபோதெல்லாம் எழுந்தோடி வருகின்றாய்
கண்ணயரும் வேளையிலும் கனவில் வந்து சிரிக்கின்றாய்
வண்ணமயில்போல வந்து வடிவங்கள் காட்டுகின்றாய்
கண்ணீர் துளிர்க்கையிலே நீ காற்றாகிப் போனதென்ன?

*விளையாட்டரங்கு வீதி,*
*கட்டப்பிராய்.*

*உன் நினைவில்:*
**உன் உறவுகள்.**
(67275)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி: 222 3837, 222 9933 தொலைநகல்: 222 9944

## யாருக்கு இந்த இழிவு?

யுத்தம் என்றாலும் அதைக் கைக்கொள்வதிலும் ஒரு நாகரிகம் - நியாயம் - அவசியமாகும்.

யுத்தத்தில் பொதுவாகக் கையாளவேண்டிய ஒரு நடைமுறை சர்வதேச வழக்காறாக இருந்து வருகின்றது. அதைப் பின்பற்றுவது யுத்தத் தரப்புகளின் கடமையாகும்.

நியாயம் வேண்டி - கௌரவமான வாழ்வும், இருப்புக்கான உரிமையும் வேண்டி - நீதியுடன் போராடி வருகின்ற ஈழத் தமிழினத்துக்கு எதிராகக் கொடூரமான அடக்கு முறைகளைக் கட்டவிழ்த்து விட்டிருக்கின்றது தமிழர் தாயகத்தை ஆக்கிரமித்து நிற்கும் கொழும்பு அரசு.

அநுராதபுரத்தில் உள்ள விமானப்படையினரின் பிரதான தளம் மீது அதிகாலை வேளை ஊடுருவி ஒரு துணிச்சலான தாக்குதலைப் புலிகளின் கரும்புலி அணி ஒன்று மேற்கொண்டிருக்கின்றது. அதே சமயம், புலிகளின் விமானங்கள் அந்தத் தளம் மீது குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்திவிட்டுச் சென்றிருக்கின்றன.

அரச படைநிலை ஒன்றுக்குள் ஊடுருவிச் சென்று புலிகள் நடத்திய இந்தத் தாக்குதலை 'கோழைத்தனமான நடவடிக்கை' என்று கொழும்பில் பௌத்த - சிங்களப் பேரினவாத சக்திகள் விமர்சிப்பது வேடிக்கையானது.

அதி நவீன ஜெட் விமானங்கள் மூலம் தமிழர் தாயகப் பகுதி மீது - குறிப்பாக வன்னிப் பெருநிலப்பரப்பில் உள்ள மக்கள் குடியிருப்புகள் மீது - குண்டுமாரி பொழிவதை 'துணிச்சலான நடவடிக்கையாக' சித்திரிக்கும் தென்னிலங்கை, அரச விமானப் படைத்தளம் மீதே - இராணுவ இலக்கு ஒன்றின் மீதே - நேரடியாக வந்து, தன்னுயிரைத் தானே களப்பலியாக்கி, தாக்குதல் நடத்தியிருப்பதை 'கோழைத்தனமான நடவடிக்கை' என்று விமர்சித்திருப்பது விந்தையானது.

அதேசமயம், இந்தத் தாக்குதல் நடவடிக்கையின்போது உயிரிழந்த மூன்று பெண்கள் உட்பட இருபத்தியொரு கரும்புலிகள் தொடர்பாக இலங்கைப் படைத்தரப்பு நடந்துகொண்ட விதம் அருவருக்கத்தக்கது; மோசமானது. தென்னிலங்கைச் சிங்களத்துக்கு அபகீர்த்தியை - மேலும் கெட்ட பெயரை - சம்பாதித்துத் தந்திருக்கின்றது அந்த இழிவான செயல் நடவடிக்கை.

அநுராதபுரம் விமானப்படைத்தளத்தில் களப்பலியாகிக் கிடந்த இந்த 21 பேரினதும் சடலங்களையும் நிர்வாணமாக்கி, இரண்டு டிராக்டர்களில் ஏற்றிய படையினர் அவற்றை அநுராதபுரம் பொது வைத்தியசாலைக்கு முன்பாக அப்பிரதேச மக்களின் தாராளப் பார்வைக்கு வைத்து இழிவு படுத்தியிருக்கின்றார்கள். முழு நிர்வாணமாக வைக்கப்பட்டிருந்த அச் சடலங்களை பலர் படம் பிடிக்கவும், விடியோவில் பதிவு செய்யவும் அனுமதிக்கப்பட்டனர்.

யுத்தத்தில் உயிரிழந்தவர்களின் சடலங்களுக்கு மரியாதை செலுத்த வேண்டும் என்பது பொதுவான யுத்த தர்மமாகும். சர்வதேசப் போர் விதிமுறையாகும்.

சர்வதேச நடைமுறைகளுக்கு மாறாகக் கொடூர யுத்தம் ஒன்றைத் தமிழர் தரப்பு மீது கட்டவிழ்த்து விட்டிருக்கும் கொழும்பு, இந்த விடயத்திலும் மனிதத் தன்மையின்றி, அநாகரிகமாக நடந்துகொண்டிருக்கின்றது.

அநுராதபுரம் ஆயர் வண. நோபர்ட் அரசுப் படைகளின் இச் செயல் குறித்து வருத்தம் தெரிவித்துக் கண்டித்திருக்கிறார் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

''சடலங்களுக்கு உரிய மரியாதை செலுத்தப்படவில்லை. நிர்வாண கோலத்தில், பொது மக்கள் பார்க்க அவற்றை எடுத்துச் சென்றமை மனிதத் தன்மையுடன் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடு அல்ல'' - என்ற சாரப்பட அவர் விமர்சித்திருக்கின்றார்.

யுத்தத்தில் இறந்தவன் எதிரி என்றாலும் அவனது சடலத்துக்கு மரியாதை செலுத்தவேண்டும் என்ற தார்மீக நெறி மதிக்கப்படாமல், தனது அநாகரிகப் போக்கை இதிலும் வெளிப்படுத்தியிருக்கின்றது தென்னிலங்கை.

வெற்றிகரமான தாக்குதல் ஒன்றைப் புலிகள் நடத்தியமையைத் தாங்கிக் கொள்ள முடியாது படைத்தரப்பு, தாக்குதல் நடத்தியவர்களை இழிவு படுத்துவதாக எண்ணிக்கொண்டு தன்னைத் தானே இழிவு படுத்தித் தாழ்த்திக்கொண்டிருக்கின்றது.

இந்த மோசமான செயல் நடவடிக்கையை இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார நியாயப்படுத்தி அனைவர் காதிலும் பூச்சுற்ற முயற்சிக்கின்றமை அநியாயத்திலும் அநியாயமாகும்.

''தாக்குதல் நடத்த வந்த கரும்புலிகள் தற்கொலைத் தாக்குதல் அங்கிகளை அணிந்திருந்தனர். அவற்றைக் களையாமல் பொது வைத்தியசாலைக்கு சடலங்களை அனுப்புவது ஆபத்தானது. அதனால் உடைகளைக் களைந்தோம். பொது வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்கையில் இடையில் பொதுமக்கள் யாரேனும் அவற்றைப் பார்த்திருக்கக்கூடும். அவ்வளவுதான்.'' - என்று விளக்க வியாக்கியானம் கூறுகின்றார் இராணுவப் பேச்சாளர்.

சரி, அவ்வாறு ஆடைகள் களையப்பட்ட நிலையில் அவற்றைப் பொதுமக்களின் பார்வைக்கு வேண்டுமென்றே வைத்த செயலை எப்படி நியாயப்படுத்த முடியும்?

ஆனால், போர் முனையில் இப்படி அநாகரிகமாக நடந்து கொள்வதும் அதை நியாயப்படுத்துவதும் இலங்கை அரசுப் படைகளின் வழமையான செயற்பாடுதான் என்பதையும் நாம் கவனிக்க வேண்டும்.

போரில் இறந்தவர்களின் சடலங்கள் மட்டும் அல்ல, அவர்கள் மீளாத்துயில் கொள்ளும் சமாதிகளும் கூட மதிக்கப்பட வேண்டும் என்பதே பொதுத் தர்மமாகும். உலகெங்கும் மதிக்கப்பட்டு வரும் இந்த நடைமுறையை இலங்கைப் படைகள் மட்டும் பின்பற்றுவதில்லை.

யுத்தத்தில் உயிரிழந்து மீளாத் துயில் கொண்டவர்களைக் கூட, அங்கு நிம்மதியாக உறங்கவிடாமல் அநாகரிகமாக நடந்து கொண்டு, குழப்புகின்றது படைத்தரப்பு.

இலங்கை அரசு இதுவரை மேற்கொண்ட படை நடவடிக்கைகளின் போது, விடுதலைப் புலிகளின் சுமார் பத்து மாவீரர் துயிலும் இல்லங்கள் அதன் கட்டுப்பாட்டுக்குள் வந்திருக்கின்றன. அப்பிரதேசங்களை அரசுப் படைகள் கைப்பற்றிய கையோடு அவை எல்லாம் புல்டோஸர் கொண்டு சீரழித்து சிதைக்கப்பட்டன. அதுவே முதல் வேலையாக அப்போது மேற்கொள்ளப்பட்டது.

இருபத்தியொரு கரும்புலிகளின் சடலங்களை நிர்வாணமாக்கி, சிங்களப் பொதுமக்களின் பார்வைக்கு வைத்ததன் மூலம் தாக்குதல் ஆத்திரத்தைத் தீர்த்துக்கொள்ள முயன்ற படைத் தரப்பு இப்போது அந்தச் செயற்பாட்டுக்கு நியாயம் காட்டுவது போல, மாவீரர் துயிலும் இல்லங்கள் சீரழிக்கப்பட்டமைக்கும் காரணம் கூறப்பட்டது.

''இந்த மாவீரர் துயிலும் இல்லங்களில் சடலங்களைப் புதைத்து வைத்திருக்கிறோம் என்ற பெயரில் புலிகள் ஆயுதங்களை மறைத்து - ஒளித்து - வைத்திருக்கலாம். அதனால் தான் அவற்றைக் கிண்டிக் கிளறிப் பார்க்கின்றோம்.'' - என்று இராணுவ அதிகாரி ஒருவர் விளக்கம் தந்திருக்கின்றார்.

இறந்த வீரர்களின் - அரசுத் தரப்பின் வார்த்தைகளில் கூறுவதானால் 'பயங்கரவாதி'களின் - சடலங்களுக்கு அவமரியாதை செய்வதும் பயங்கரவாதம்தான். இதுவும் அரச பயங்கரவாதத்துக்குள் அடக்கம்.

# நாட்டின் உல்லாசப் பயணத்துறையில் 21 சதவீதம் திடீர் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது!

## அநுராதபுரம் விமானத் தளத்தாக்குதலின் எதிரொலி

கொழும்பு,ஒக். 24

இலங்கைக்கான உல்லாசப் பயணிகளின் வருகையில் 21 சதவீதம் திடீர் வீழ்ச்சி ஏற்பட்டிருப்பதாக உல்லாசப் பயணிகள் சபை அறிவித்துள்ளது.

அநுராதபுரம் விமான நிலையத்தின் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தி ஒரு நாளைக்குப் பின்னர் உல்லாசப் பயணிகள் சபை விடுத்த அறிக்கையில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செப்ரெம்பர் மாதத்தில் உல்லாசப் பயணிகளின் வருகை 2006ஆம் ஆண்டின் அதே காலப் பகுதியுடன் ஒப்பிடுகையில் 3.6 சத வீதம் வீழ்ச்சி கண்டு 37,104ஆக விருந்துள்ளது. செப்ரெம்பர் வரையிலான முதல் ஒன்பது மாத காலத்துக்கான வருகை 21 வீதம் குறைந்துள்ளது.

கடந்த வாரத்தில் யால வன விலங்கு சரணாலயத்தின் மீதும் பின்னர் அநுராதபுரம் விமானத் தளத்தின் மீதும் புலிகள் கடுமையான தாக்குதல்களை நடத்தியிருந்தபோதிலும் அச்சமடைவதற்கு ஒன்றுமில்லையென்று உல்லாச பயணிகள் சபை அறிவித்துள்ளது.

தலைநகர் கொழும்பிலிருந்து சுமார் 210 கி.மீ(130 மைல்) தூரத்திலுள்ள அநுராதபுரம் பழம் பெருமைமிக்க புராதன நகரமாகும். உல்லாசப் பயணிகளைக் கவர்ந்திழுக்கும் பிரதான பௌத்த புனித நகரமாகும்.

உல்லாசப் பயணிகள் அல்லது அத்துறையின் மீது இத்தாக்குதல் சம்பவத்தால் நேரடித் தாக்கம் ஒன்றும் ஏற்படவில்லை. உல்லாசப் பயணத் தொழிலுக்கு எதுவித அச்சுறுத்தலும் ஏற்பட்டிருக்கவில்லை என்று சபையின் மேலதிக பொதுப் பணிப்பாளர் திலீப முதாதெனிய தெரிவித்தார்.

இலங்கையின் வடக்கு - கிழக்கு பிரதேசங்களுக்கு பயணம் செய்ய வேண்டாமென பலநாடுகள் தமது நாட்டு பிரஜைகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளன.

எதிர்வரும் குளிர்காலத்தில் உல்லாசப் பயணிகளின் வருகை நன்றாக இருக்கும் என்று பல ஹோட்டல் உரிமையாளர்கள் எதிர்பார்த்திருக்கிறார்கள். ஆனால் எதிர்காலத்தில் தெற்கில் ஏதும் தாக்குதல் இடம் பெறுமானால் நிலைமைகள் மாற்ற மடையலாம் என்கிறார் சிமித் பங்குச் சந்தை நிறுவனத்தின் ஆய்வாளர் தலால் மார்சுக்.

உல்லாசப் பயணிகளின் வருகை குறைந்தமைக்கு பாதுகாப்புப் பிரச்சினைகளே காரணம். இதனால் இத் தொழிலில் ஈடுபட்டிருந்தவர்கள் வேலை இழப்புக்கு முகம் கொடுக்கவும் பகுதி நேர வேலைகளைத் தேடுவதற்கும் உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

2007 மார்ச்சுக்கும் ஜூலைக்கும் இடையே உல்லாசப் பயணிகளின் வருகை மாதம் 30 வீதம் வீழ்ச்சி கண்டுள்ளது. ஒகஸ்டில் சிறிது முன்னேற்றம் கண்டது.

2006ஆரம்பத்திலிருந்து அரச படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் மோதல்கள் விரிவடைந்தமையால் உல்லாசப் பயணிகளின் வருகை பொதுவாகவே வெகுவாகக் குறைந்து வந்தது.

(அ-ப)

## கே.வி.குணசேகரத்தின் ஒன்று கூடி மகிழ்தல் இன்று யாழ்.இந்துவில்

யாழ்ப்பாணம்,ஒக்.25

ஆக்க இலக்கியத்திலும் ஆன்மீக இலக்கியத்திலும் நிறைந்த ஆக்கங்களை உருவாக்கியுள்ள நல்லூர் கல்விக் கோட்ட அதிகாரி கே.வி.குணசேகரம் இன்று காலை8.30மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் 'ஒன்றுகூடி மகிழ்தல்' நிகழ்வை நடத்தவுள்ளார்.

இந்நிகழ்வில் இவரது ஆக்கங்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்படும். பார்வையாளர்களுக்கு கந்தசஷ்டிக் கவசம் இலவசமாக வழங்கப்படும். (1)

## லயன்ஸ் கழகங்களின் செயல்திட்டங்கள் இன்று

யாழ்ப்பாணம்,ஒக். 25

சுன்னாகம் லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் பல்வேறு செயற்றிட்டங்கள் இன்று முன்னெடுக்கப்பட உள்ளன.

ஆனைக்கோட்டை துரைஐயா மண்டபத்தில் நடைபெறும் நிகழ்வில் இத்திட்டங்கள் முன்னெடுக்கப்படும்.

இந்நிகழ்வில் லயன்ஸ் மாவட்ட ஆளுநர் எஸ்.இராகவன் கலந்துகொள்வார்.

ஐந்தாம் தர புலமைப்பரிசில் பெற்ற 96மாணவர்களுக்குச் சான்றிதழ்களும் மற்றும் பரிசில் பொருள்களும் -

உடுவில் கல்விக்கோட்டத்தில் சிறுவர் தினத்தை ஒட்டி நடத்தப்பட்ட சித்திரம், கவிதைப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசில்களும் -

தெரிவு செய்யப்பட்ட விதவைப் பெண்களுக்கு உடுபுடைவைகளும் - வழங்கப்படவிருக்கின்றன.

இதேவேளை -

ஆளுநர் வருகையை ஒட்டிய தீவக லயன்ஸ் கழகத்தின் விசேட நிகழ்வும் இதே இடத்தில் இன்று காலை 8.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

பல்வேறு செயல் திட்டங்கள் இன்று முன்னெடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (1)

### நாளை

| | |
|---|---|
| ஐப்பசி - 09 : | வெள்ளிக்கிழமை 26.10.2007 |
| திதி : பூரணை | முற்பகல்: 11.08 |
| நட்சத்திரம் : | அச்சுவினி , முன்னிரவு: 07.49 |
| [illegible] | 06.03 - 07.33 |
| [illegible] | : 10.33 - 12.03 |

## வரவு செலவுக்கு மேலதிகமாக ரூ.61.8 பில்லியனை அரசு கோரும்

### ஊழியர் சம்பளம் போன்ற செலவுக்காக

கொழும்பு, ஒக். 25

2007ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் 61.8 பில்லியன் ரூபாவை மேலதிகமாகக் கோருவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

அரச சேவையாளர்களின் சம்பளங்கள், தேசிய பாதுகாப்பு மற்றும் மானிய செலவினங்களுக்காக இந்த நிதி தேவைப்படுவதாக நாடாளுமன்றத்தில் அரசாங்கம் தாக்கல் செய்துள்ள ஆவணம் ஒன்றில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பான பிரேரணை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படவிருப்பதாக வருமானம் மற்றும் நிதித் துறை பிரதி அமைச்சர் றஞ்சித் சியாம்பலப்பிட்டிய தெரிவித்தார். எனினும் இது குறித்த மேலதிக விவரம் எதனையும் தெரிவிக்க அவர் மறுத்துவிட்டார்.

மேலதிகமாகக் கோரப்படும் பணத்திலிருந்து 18.5 பில்லியன் ரூபாவை பொதுத்துறை சம்பளங்களுக்காகவும் ஏழ்மையிலுள்ளவர்களின் மானியங்களுக்காகவும் சிவில் பாதுகாப்பு மற்றும் புலிகளிடமிருந்து கைப்பற்றிய பகுதிகளின் வளர்ச்சிக்காகவும் 16.30 பில்லியன் ரூபாவும் பயன்படுத்தப்படவிருக்கின்றது. எஞ்சிய தொகை வளர்ச்சித் திட்டங்களுக்குப் பயன்படுத்தப்படும். (அ-ப)

## புலிகளுடனான பேச்சுவார்த்தைக்கு அரசின் கதவு திறந்தே இருக்கிறதாம்

கொழும்பு, ஒக்.25

தமிழீழ விடுதலைப் புலிகள் மிகப் பெரிய தற்கொலை தாக்குதல் ஒன்றை நடத்தி அரசுக்கு பாரிய அளவில் அழிவுகளை ஏற்படுத்தியுள்ள நிலையிலும் புலிகளுடன் அமைதிப் பேச்சுகளில் ஈடுபடுவதற்கான கதவுகள் திறந்தே இருக்கின்றனவென்று அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

70 ஆயிரம் மக்களை பலிகொண்டுள்ள 20 வருடகால இனப்பிரச்சினை தொடர்பாக பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண்பது என்ற அரசின் நிலைப்பாட்டை புலிகளின் அநுராதபுர தாக்குதல் மாற்[illegible]டவில்லை என்று வெளியுறவு செயலாளர் பாலித கொஹன்ன தெரிவித்துள்ளார்.

இதேவேளை தமிழீழ விடு தலைப் புலிகளை முற்றாக ஒழித்துக்கட்டுவது என்பதிலும் அவர்கள் ஆதிக்கம் செலுத்தும் பகுதிகளிலிருந்து வெளியேற்றியே தீர்வதென்பதிலும் அரசு தீர்க்கமாகவே உள்ளது என்பதையும் அரசு வெளிப்படுத்தியுள்ளது.

அநுராதபுரத்தின் மீதான விடுதலைப் புலிகளின் தாக்குதல் கள நிலையில் எதுவித மாற்றத்தையும் ஏற்படுத்தப் போவதில்லை என்று பாலித கொஹன்ன தெரிவித்தார்.

(ப)

## இன்று நடப்பவை

யாழ்ப்பாணம்,ஒக.25

காரைநகர், வியாவில் ஐயனார் கோயில் மண்டபத்தில் இன்று வியாழக்கிழமை காலை 6 மணியளவில் திருவாசகமுற்றோதல் இடம்பெறவுள்ளது.

தொடர்ந்து நண்பகல்12மணிக்கு காரைநகரில் தரம்5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 17 மாணவர்களை ஊக்குவிக்கும் முகமாக சேமிப்புப் புத்தகங்கள் வழங்கப்படவுள்ளன. ஒரு மணியளவில் மகேஸ்வர பூசை இடம்பெறும். (203)

* * *

யாழ்ப்பாணம்,ஒக்.25

கைதடி பொது நூலகத்தினர் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு கைதடி முத்துக்குமாரசாமி மகா வித்தியாலயத்தில் மாணவர்களிடையே பலவகைப் போட்டிகளை நடத்தவுள்ளனர்.

இதில் கதைகூறல், வாசிப்பு, பாடுதல், பேச்சு, கட்டுரையாக்கம், கவிதையாக்கம் போன்ற போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

பொதுஅறிவுப்போட்டிகள் எதிர்வரும் 29ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு கைதடிமுத்துக்குமாரசாமி மகாவித்தியாலயம், கைதடி குருசாமி வித்தியாசாலை, கைதடி விக்னேஸ்வரா வித்தியாசாலை ஆகிய பாடசாலைகளில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (203)

* * *

யாழ்ப்பாணம்,ஒக்.25

இருபாலை, டச்சுவீதியில் அமைக்கப்பட்டுள்ள மதுகல்வி நிலையத்தின் பரிசுத்தினமும் வாணி விழாவும் இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு நிறுவனத்தின் பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளன.

நிறுவனஅதிபர் எஸ்.கே.கிருபாகரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் கோப்பாய் ஆசிரியகலாசாலை அதிபர்ஆ. ஸ்ரீஸ்கந்தமூர்த்தி பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (203)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிமன்ற வளாகமும் புனர்வாழ்வு நிலையமும் நேற்று வைபவ ரீதியாகத் திறக்கப்பட்டன

யாழ்ப்பாணம், ஒக்.25

யாழ்.நகரில் அமைக்கப்பட்ட நீதிமன்ற வளாகக் கட்டடத் தொகுதியும் உயிர் அச்சுறுத்தல் காரணமாக சரண் அடைபவர்களை தங்கவைப்பதற்கான புனர்வாழ்வு நிலையமும் நேற்று வைபரீதியாகத் திறந்து வைக்கப்பட்டன.

யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்த பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா நீதிமன்றக் கட்டடத் தொகுதியை முற்பகல் 10.30 மணிக்கும் யாழ். மேல்நீதிமன்ற நீதிபதி பி.சுவர்ண ராஜ் புனர்வாழ்வு நிலையத்தை பிற்பகல் 3 மணிக்கும் திறந்துவைத்தனர்.

பிரதம நீதியரசர் சரத் என். சில்வா நீதிமன்றத் திறப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு நினைவுக் கல்லைத் திரைநீக்கம் செய்து நீதிமன்றக் கட்டடத் தொகுதியைத் திறந்துவைத்தார்.

மேல் நீதிமன்ற நீதிபதி பி. சுவர்ணராஜ் தலைமையில் நடந்த நிகழ்வில் பிரதம நீதியரசர் சரத் என். சில்வா, நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் ஜயதிலக, நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்புத் திட்டப் பணிப்பாளர் ஷாமலி குணவர்த்தன, ஓய்வுபெற்ற மேல்நீதிமன்ற நீதிபதி கே.பி.எஸ். வரதராஜா, முன்னாள் நீதிபதி மு.திருநாவுக்கரசு, யாழ். மாவட்ட நீதி பதி ஆர்.ரி.விக்னராஜா ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

இந்த நிகழ்வில் யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை, நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், யாழ். மாவட்ட அரச அதிபர் கே.கணேஸ், யாழ். மறை மாவட்டக் குரு முதல்வர் ஜஸ்டின் பி. ஞானப்பிரகாசம், யாழ். பல் கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை, பருத்தித்துறை மாவட்ட நீதிவான் ப. அரியநாயகம், சாவகச்சேரி நீதிவான் அ.பிரேம்சங்கர், மல்லாகம் நீதிவான் திருமதி ப.இளங்கோவன், ஊர்காவற்றுறை நீதிவான் எஸ்.அலெக்ராஜா, சிவில் மேல் முறையீட்டு மேல்நீதிமன்ற நீதிபதிகளான ஆர்.தியாகேந்திரன், ரி.விஸ்வநாதன் ஆகியோர் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

உயிர் அச்சுறுத்தல் காரணமாக தஞ்சம் அடைந்தவர்களை தங்கவைப்பதற்காக யாழ்.மேல்நீதிமன்றக் கட்டடத்தில் அமைக்கப்பட்டுள்ள புனர்வாழ்வு நிலையத்தை திறந்துவைக்கவும் சாவகச்சேரி, மல்லாகம் நீதிமன்றக் கட்டடங்களுக்கான அடிக்கற்களை நாட்டவும் பிரதம நீதியரசர் திட்டமிட்டிருந்தார். எனினும் அவசரமாக கொழும்பு திரும்பவேண்டிய காரணத்தால் உடன் கொழும்பு திரும்பினார்.

மல்லாகம் நீதிமன்றக் கட்டடத்துக்கான அடிக்கல்லை மல்லாகம் மாவட்ட நீதிபதி திருமதி சறோஜினி இளங்கோவனும் சாவகச்சேரி நீதிமன்றக் கட்டடத்துக்கான அடிக்கல்லை சாவகச்சேரி மாவட்ட நீதிபதி அ.பிரேம்சங்கரும் நேற்றுப் பிற்பகல் சமயக் கிரியைகளுடன் நட்டனர்.

(அ-1-50-51-68)

## விமானப்படைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டுநாயக்கா வான்படைத் தளத்தின் தரை நிலைப் பாதுகாப்பு இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் அதன் பொறுப்பதிகாரியாக மேஜர் ஜெனரல் லக்சிறி அமரதுங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

இரத்மலானை விமானப்படைத்தளத்தின் பாதுகாப்பு இராணுவத்தின் 11ஆவது படையணியின் 2 ஆவது பிரிக்கேட் படையினரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இந்தப் புதிய திட்டத்தின்படி அந்தந்த மாவட்டங்களில் உள்ள முப்படையினர், பொலிஸார், புலனாய்வுப் பிரிவினர் அகியோர் புதிய கட்டளைப் பணியகத்தின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளனர். (சி)

## 4 ஹெலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரக ஹெலிக்கொப்டரும், பீச் கிராவட் ரக சிறிய ரக விமானம் ஒன்றும், பி.டி 6 ரக விமானங்கள் மூன்றும், கே. 8 ரக விமானம் ஒன்றும், எம். ஐ. - 17ரக ஹெலிக்கொப்டர் ஒன்றும், பி.ஐ. - 212 ரக ஹெலிக்கொப்டர் ஒன்றும் முற்றாக அழிவுக்குள்ளாகின'' - என்று விவரங்களை வெளியிட்டார் பிரதமர் ரட்ணசிறி.

''இதனை நாம் ஒப்புக்கொள்கிறோம். இதில் நாம் எதனையும் மறைக்கவில்லை. ஆனால் படையினரின் மன வலிமையையும் வீரத்தையும் குறைத்து மதிப்பிட முடியாது.

தற்போது அநுராதபுரம் வழமை நிலைக்குத் திரும்பிவிட்டது. படையினர் அங்கு தொடர்ந்தும் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். இந்தச் சம்பவத்தை நல்லதொரு அனுபவமாகக் கொண்டு படையினர் எதிர்கால நடவ டிக்கைகளைச் செவ்வனே செய்யமுடியும்'' - என்றார்.

## அரசின் சொந்தத் தீர்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு சரித்திரமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாகும்.

நீதி நியாயம் அதுவாக நிலை நிற்கவோ அல்லது நிலைநிறுத்தப்படவோ முடியாது. அது மனிதனின் ஆத்மீக லௌகீக அபிவிருத்திக்கு பங்களிக்கும் ஒரு முக்கிய தேவைப்பாடாகும். நீதி பிரதானமாக சமாதானத்துடன் ஒன்றிணைக்கப்பட்டதாகும். ஆகவே இந்நிகழ்ச்சியின் கருப்பொருளாக நாங்கள் சமாதானத்தையும் நீதியையும் முன்நிறுத்தியுள்ளோம்.

சமாதான அமுலாக்கமானது சகல தரப்பினரதும் விருப்பு வெறுப்புக்களைக் கருத்தில் கொண்டு உணர்வு பூர்வமான முறையில் அணுகப்பட வேண்டியதொன்றாகும். யுத்தம் வெடிப்பதற்கு இப் பிரதேச மக்கள் முகம்கொடுக்க வேண்டியிருந்த குறைபாடுகளை, காரணிகளை நாம் அடையாளம் காணுதல் வேண்டும். இவற்றுள் பெரும்பாலான குறைபாடுகள் ஏற்கனவே நிவாரணம் வழங்கப்பட்டுள்ள சட்ட மற்றும் அரசியல் சம்பந்தமானவையாகும். குறிப்பாக 1987ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட 13ஆவது அரசமைப்புத் திருத் தச் சட்டத்தைக் குறிப்பிடலாம். இத்திருத்தச்சட்டத்திற்கு 20 வருடங்கள் கடந்திருந் தாலும் பிராந்தியத்தின் மனிதாபிமான, பொருளாதார நல்வாழ்வுக்கு இட்டுச் செல்லும் வகையில் அதனைப் பூரண அமுலாக்கலுக்குச் சந்தர்ப்பம் கிட்டவில்லை.

ஜனாதிபதியைச் சமூக சம்பந்தமான சந்திப்பொன்றில் சந்திக்க நேர்ந்தபோது இத்திறப்பு விழா பற்றியும் யாழ்ப்பாணத்தில் எங்கள் நிகழ்ச்சிகள் பற்றியும் என்னிடம் ஆவலோடு வினவினார். இந் நிகழ்ச்சித் திட்டத்திற்கு அரசினாலான சகல உதவிகளையும் செய்வதாக உறுதியளித்ததுடன், நாட்டின் இன்றைய பரிதாபகரமான நிலைக்கு இட்டுச் சென்றுள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக ஒரு பூரணமான சொந்தத் தீர்வுத்திட்டம் ஒன்றை முன்வைப்பதாகவும் கூறினார்.

அவரது சொந்தத் தீர்வுத்திட்டம் பற்றி தொடர்ந்து கூறுகையில்,

'நாங்கள் 13ஆவது திருத்தச்சட்டத்தை 'மேலுமொன்று'டன் அதாவது நல்லெண்ணத்தையும் வேற்றுமைகளையும் நிவர்த்தி செய்வதற்கான ஆவலை வெளிப்படுத்த வேண்டும் என்றும் கூறினார். இராஜதந்திர மட்டத்திலான மற்றும் நாட்டுத் தலைவர்களுக்கிடை யிலான கலந்துரையாடல்களில் வெளிப் பட்ட மேற்படியான ஒரு சொற்றொடரை அவர் பாவித்திருப்பார் என நான் நினைக் கின்றேன். ஜனாதிபதியால் பிரயோகிக்கப்பட்ட 'மேலும் ஒன்று' (Plus one) என்று கூறப்பட்ட பதத்தின் அர்த்தமானது, இப் பிராந்தியத்திலே அழித்து நாசமாக்கப் பட்டுள்ளவைகளை அரசமைப்பு மற்றும் சட்ட ரீதியாக மீண்டும் கட்டியெழுப்பு வதற்கு தேவைப்படும் வழிகோலும் நேர்மையும், உண்மையுமாகுமென நான் நினைக்கிறேன். - என்றார். (அ)

## கரும்புலி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பார்வைக்கு ஸ்ரீலங்கா இராணுவம் வைத்துள்ளது. அந்தப் படங்களை இந்த மின்னஞ்சலுடன் இணைத்துள்ளோம். இது போரில் உயிரிழந்தோர் தொடர்பிலான ஜெனிவா மாநாட்டின் முடிவுகளுக்கு எதிரானது என்பதனை நீங்கள் ஒப்புக்கொள்வீர்கள் என்று நாம் உறுதியாகக் கருதுகிறோம்.

போரில் உயிரிழந்தோருக்கு பல்வேறு சமூகத்தினரும் உயரிய மதிப்பளித்து வருகின்றனர்.

போரில் உயிரிழந்தோர் தொடர்பிலான ஜெனிவா மாநாட்டின் முடிவு சரத்து 130 ஐ நாம் சுட்டிக்காட்டுகிறோம்.

உயிரிழந்த தமிழீழ விடுதலைப் புலிப் போராளிகளினது உடல்களை ஸ்ரீலங்கா இராணுவம் நிர்வாணப்படுத்தியமையானது அவர்களை நேசித்த குடும்பத்தினரைக் கடும் அதிர்ச்சியடைய வைத்துள்ளது.

எமது இயக்க வரலாறு முழுமைக்குமே ஸ்ரீலங்கா இராணுவப் போர்க் கைதிகளையும் உயிரிழந்த ஸ்ரீலங்கா இராணுவத்தினரையும் நாம் கௌரவத்துடனே நடத்தி மரியாதை செலுத்தியிருக்கிறோம் என்பதனையும் தங்களுக்குச் சுட்டிக்காட்டுகிறோம் என்று அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## கொலைகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். ஆயர் பிரதம நீதியரசரிடம் மேலும் தெரிவித்ததாவது:-

குடாநாட்டில் நாளுக்கு நாள் கொலை, கடத்தல், காணாமற் போதல், கொள்ளை, கப்பம் கோருதல் போன்ற வன்முறை சம்பவங்கள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. இதனால் மக்கள் ஒரு பயங்கரமான அச்ச உணர்வுடன் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். சிலர் குடாநாட்டை விட்டு இத்தகைய சம்பவங்களால் வெளியேறி வருகிறார்கள். பொதுமக்களின் பாதுகாப்பு இங்கே உறுதிப்படுத்தப்படவில்லை.

எனவே, பிரதம நீதியரசராகிய நீங்கள் இந்த விடயத்தில் சம்பந்தப்பட்டவர்களுடன் நேரடியாகத் தொடர்புகொண்டு வன்முறை சம்பவங்களுக்குக் காரணமானவர்களை அடையாளம் கண்டு நடவடிக்கை எடுப்பதுடன், பொதுமக்களின் சுதந்திரமான நடமாட்டத்தையும், பாதுகாப்பையும் உறுதிப்படுத்தவேண்டும் - என்றார்.

இது தொடர்பாக விரைவில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதாக பிரதம நீதியரசர் ஆயருக்கு உறுதியளித்தார்.

## மரண அறிவித்தல்கள்

### கந்தையா குணரத்தினம்



புன்னாலைக்கட்டுவனைப் பிறப்பிடமாகவும் ஓட்டுமடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா குணரத்தினம்(கணேஸ்) நேற்று(24.10.2007)புதன்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*687/28, மானிப்பாய் வீதி,*
*ஓட்டுமடம்.*

(67294)

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி குமாரசாமி இராசேந்திரபூபதி

புன்னாலைக்கட்டுவன் தெற்கைச் சேர்ந்த திருமதி குமாரசாமி இராசேந்திரபூபதி நேற்று (24.10.2007) புதன்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்பாத்துரை - ஆசைப்பிள்ளை தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்ற குமாரசாமியின் அன்பு மனைவியும் சிதம்பரப்பிள்ளை, துரைராசா, காலஞ்சென்றவர்களான செல்லம்மா, முதலித்தம்பி, நாகரெத்தினம், பரமேஸ்வரி, ஞானேஸ்வரி ஆகியோரின்அன்புச் சகோதரியும் மகேஸ்வரியின் அன்புத் தாயும் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியத்தின் அன்பு மாமியும் சிவாஜினி,சிவரூபன் (லண்டன்), பரமேஸ்வரன்(அதிபர்-ஈவினை த.க.பா),ரூபி (லண்டன்) ஆகியோரின் பேர்த்தியும் கதிர்தர்சினி, தர்சனன், சயந்து,மைத்திரி (லண்டன்) ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(25.10.2007) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 2மணியளவில் தகனக்கிரியைகளுக்காக விலங்கன் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்தஅறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*புன்னாலைக்கட்டுவன் தெற்கு.*

தகவல்:
மகேஸ்வரி (மகள்).

## A/L மாணவர்களுக்குரிய தமிழ்ப் பாடம் கருத்தரங்கு

இடம்: நியூ பிறைற் கல்வி நிலையம்
மார்டீன் வீதி, யாழ்ப்பாணம்.
திகதி: 27.10.2007 சனிக்கிழமை
பிரிவு:-I - 8.00 - 11.00 வரை
பிரிவு:-II - 11.30-2.30 வரை
முற்கூட்டியே அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்
வெளிமாணவர்கள்பங்குபற்றலாம்.
வரையறுக்கப்பட்ட அனுமதிகள்
(67281) ஆசிரியர்:- ஜீ.ஜஸ்டின்.

## அன்பொளி கல்வி நிலையம்

தபோற்கந்தோர் வீதி. சாவகச்சேரி.
தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை 2007
சித்தியடைந்த மாணவர்களுக்கான
பரிசளிப்பு நிகழ்வு

எமது கல்விநிலையத்தில் கல்விகற்றுச் சித்தியடைந்த மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு 27.10.2007சனிக்கிழமை காலை 9மணிக்கு நடைபெறும். மாணவர்களைத் தவறாது கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

(67293) இயக்குநர்.

## மரண அறிவித்தல்கள்

### கிறிஸ்ரி ஜெயந்தன்



(கணனி விரிவுரையாளர்)

கரம்பனைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம், கண்டிவீதியை வதிவிடமாகவும் கொண்ட கிறிஸ்ரி ஜெயந்தன் (23.10.2007) செவ்வாய்க் கிழமை அகாலமரணமானார்.

அன்னார் செபமணி - ராணி தம்பதியினரின் பாசமிகு மகனும், டிலோஜன் (இந்தியா), பிரியந்தன், மகிந்தன், யூட்சுகந்தன் (உயர்தர மாணவன், புனித சாள்ஸ் மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

இன்று (25.10.2007) வியாழக்கிழமை பி.ப.2.30 மணியளவில் புனித மரியன்னை தேவாலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*107, கண்டி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(67289)

தகவல்:
குடும்பத்தினர்.

### பூதப்பிள்ளை நடராசா



சுன்னாகம் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பூதப்பிள்ளை நடராசா நேற்று(24.10.2007) புதன்கிழமை காலமானார்.

அன்னார் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் தவக்குமார், ஜெயக்குமார் (சுவிஸ்), ஜெயந்தினி (கனடா), சிவகுமார் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கோமதி, சிவநேசன் ஆகியோரின் அன்பு மாமனும் சுருதிகா, துவேசன், அஸ்மிகா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னரின் இறுதிக்கிரியைகள் நேற்று(24.10.2007) புதன் கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சுன்னாகம் தெற்கு,*
*சுன்னாகம்.*

(67290)

தகவல்:
மனைவி.

### கந்தையா சுப்பிரமணியம் (மணியம்)



பலாலிதெற்கு, வயாவிளானைப் பிறப்பிடமாகவும் ஈவினையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சுப்பிரமணியம் நேற்று (24.10.2007) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - அருமைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற இளையாச்சிப்பிள்ளையின் அன்புக் கணவரும் புஸ்பநாயகி, பத்மலோயினி, கீதா, யசோதா, பரிமலதா, ஆறுமுகதாஸன்,சுகிர்தா ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவபாலன், சிவசிவா, தவக்குமார், உமாச்சந்திரன், செல்வபாலன், குலறஞ்சினி ஆகியோரின் மாமனும் மனோன்மணி, பராசக்தி, ஜெயலக்சுமி, பரமேஸ்வரி ஆகியோரின் சகோதரரும் வதூசனன், சாதுரி, சிவோதயன், சிவேதயன், சிவனுஜா, பிரவீணா, பிரதீபன், நிசாநதன, நிசாங்கா, தருஸ்கா, தனுசன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(25.10.2007) வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஈவினை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்தஅறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஈவினை,*
*புன்னாலைக்கட்டுவன்.*

தகவல்:
மகன்.


சர்வதேச லயன்ஸ் கழக இலங்கைக் கிளையின் (306) பொன்விழா நிகழ்வு
காலம்: 28.10.2007; நேரம்: காலை 10 மணி; இடம் : யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபம்.
பிரதமவிருந்தினர்:- ஆளுநர் மேதகு லயன் செ.ராகவன் MJF,JP அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.
"சேவை தெய்வீகமானது" வட பிராந்திய லயன்ஸ் கழகங்கள். (சி-53382) SERVICE IS DIVINE


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25.10.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org